DEPOSITION OF WITNESS

(Chapter XXV BNSS)

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

STC.No. 2084/2021 P.W.1 **கண்ணன், த/பெ. சண்முகம்**

நாள் 11.02.2026

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ...**

1) நான் சேராங்குளத்தில் அபினயா பிரிண்டிங் என்ற பெயரில் மார்கெட்டிங் வைத்துள்ளேன். அது என்ன வேலை என்றால் கட்டை பை மார்கெட்டிங் செய்யும் தொழில். மேற்படி பைகளை வாங்கி விற்பனை செய்வது எனது தொழில். இந்த வழக்கின் எதிரியை எனக்கு எனத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 6,7 வருடங்களாக தெரியும். எனக்கு எதிரியின் குடும்ப உறுப்பினர்களின் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். எதிரிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டு குழந்தைகள் பையன் ஒன்று, பெண் ஒன்று. மேற்படி இரண்டு குழந்தைகளும் தற்போது என்ன செய்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு இரண்டு குழந்தைகளின் பெயர்கள் தெரியும். சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த நல்லதம்பியை தெரியமா என்றால் தெரியும். வழக்கின் எதிரியினுடைய மகளை திருமணம் செய்த வகையில் எதிரியின் மருமகன் என்ற வகையில் எனக்கு தெரியும். தற்பொழுது நல்லதம்பி இறந்து விட்டார். எவ்வளவு நாட்களுக்கு முன்பு இறந்தார் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. தற்பொழுது இந்த மார்கெட்டிங்க் தொழிலை தவிர வேறு எங்காவது வேலை பார்த்து வருகிறேனா என்றால் இல்லை. எனக்கு நீடாமங்கலம் எருழாமைக்கார சந்து சாமிநாதன் மகன் பழனிச்செல்வத்தை தெரியுமா என்றால் தெரியாது. நீடாமங்கலம் அருகில் உள்ள முல்லைவாசல் கிராமம், கொத்தமங்களம் ரோடு, பக்கிரிசாமி மகன் வீரையனை தெரியுமா என்றால் தெரியாது, நான் அந்த பக்கமே போனது கிடையாது. காணுார் பருத்திக்கோட்டையை சேர்ந்த தங்கராஜ் மகன் ரவி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. 2009 காலக்கட்டத்திலிருந்து இந்த வழக்கின் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லக்கூடிய காலம் வரை நான் எங்காவது வேலை செய்து வந்தேனா என்றால் இல்லை, விவசாயம்தான் செய்து வந்தேன். மன்னார்குடியில் SMT என்ற பெயரில் சுவீட்ஸ்டால் பிளக்ஸ் , பிரிண்டிங், டீக்கடை, பாலிதீன் கம்பெனி ஆகியவைகள் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதன் உரிமையாளர் தெட்சிணாமூர்த்தி மகன் கருணாநிதி என்பரை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி 2009 ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு தொடக்கம் வரை SMT பாலிபேக்ஸ் நிறுவனத்தில் பணி செய்து வந்த நபர் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நிறுவனத்தில் தற்காலிக ஊழியராக , பகுதி நேர ஊழியராக வேலை செய்து வந்த நபர் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஆஜர் எதிரியினுடைய மருமகனான நல்லதம்பி என்ன வேலை செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. SMT பாலிபேக்ஸ் நிறுவனத்தில் தற்பொழுதும் நான் வேலை செய்து கொண்டு இருக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கு காசோலை பணமாகாமல் வங்கியில் இருந்து திருப்பட்டதற்கான காரணம் என்ன என்றால் stop payment. மேற்படி காசோலை திருப்பட்ட விபரம் ஆஜர எதிரியை தொடர்பு கொண்டு கேட்டேனா என்றால் கேட்டேன். அவர் எந்த பதிலும் சொல்லவில்லை. அதனால் வழக்கு தொடர ஏற்பாடு செய்தேன். எனக்கும், எதிரிக்கும் நேரடியாக கொடுக்கல் வாங்கல் வழக்கில் சொன்னபப்படி இல்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகைப்படத்தில் பின் வரிசையில் இடது புறததில் இருந்து வலது புறத்தில் நிற்கும் ஆண் நபர் நான். அதே புகைப்படத்தில் இடது புறத்தில் இருந்து வலது புறமாக வரும் பெண் ஆஜர் எதிரி என்றால் சரிதான். அந்த புகைப்படத்தில் என்னில் இருந்து இடது புறத்தில் இருந்து வலது புறமாக 4 வது நபராக நீல மற்றும் சிவப்பு வெள்ளை கோடு போட்ட சட்டை அணிந்திருந்த நபர் யார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி நபர் தான் பழனிசெல்வம் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வயதான தம்பதிகளில் ஆண் நபர் தெட்சிணாமூர்த்தி மற்றொரு நபர் கருணாநிதி தயார். தயாருக்கு பின் நிற்பவர் கருணாநிதி. **மேற்படி புகைப்படம் எ.ம.சா.ஆ.-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (மேற்படி புகைப்படத்திற்கு 65b இந்திய சாட்சியல் சட்டத்தின் கீழ் சான்று இல்லாததால் ஆட்சேபணை செய்யப்படுகிறது.) மேற்படி புகைப்படம் SMT பாலிபேக்ஸ் நிறுவனத்தின் முகப்பில் எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

இந்த வழக்கின் எதிரி என்னிடம் காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் தேதி என்ன என்றால் 22.09.2021. மேற்படி காசோலையை எங்கு வைத்து கொடுத்தார் என்றால் அவரது வீட்டில் வைத்து கொடுத்தார். மேற்படி காசோலையை எதிரி கொடுக்கும் போது அவரது வீட்டில் யாரும் இருந்தார்களா என்றால் ஞாபகம் இல்லை. ஆஜர் எதிரி தற்போது மன்னார்குடியில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்பு பணி துறையில் பணி செய்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கினுடைய காசோலை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரி எனக்கு நேரடியாக கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

இந்த வழக்கில் சொல்லப்படும் காசோலை தொடர்பாக ஆஜர் எதிரி 04.06.2021 ம் தேதியன்றே Stop payment செய்ய வேணடி வங்கியில் தெரிவித்துவிட்டார் என்றாலும், 09.08.2021 ம் தேதியன்று SMT நிறுவனர் கருணாநிதி மீது காவல் துறையில் புகார் கொடுதது அவரிடம் இருந்து இந்த வழக்கு காசோலை மற்றும் எதிரியினுடைய இன்னும் சில காசோலைகளை வைத்துக்கொண்டு மிரட்டிவருவதாக புகார் கொடுத்துவிட்டார் என்றாலும் நான் சொல்வதுபோல் இந்த எதிரி 22.09.2021 ம் தேதியன்று இவ்வழக்கு காசோலை கொடுக்க வாய்ப்பே இல்லை என்றால் சரியல்ல.

நான் செல்போன் பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரிதான். தற்போது நான் சொல்லக்கூடிய செல்போன் எண்ணை dial செய்து காட்டுவதற்கு எனக்கு எந்த ஆட்சபணையும் இல்லை என்றால் சரிதான். நான் dial செய்த 9842653828 என்ற செல்போன் எண் SMT என்ற பெயரில் பதிவாகியுள்ளது. நான் சொல்வது போல் SMT கருணாநிதி என்பவரை தெரியாது என்று சொன்ன நிலையில் அவரது போன் நம்பரை save செய்து வைத்திருப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

ஆஜர் எதிரியின் மருமகன் நல்லதம்பிற்கும், SMT நிறுவனர் கருணாநிதிக்கு இடையே வரவு செலவு பிரச்சனையின் தொடர்பான நல்லதம்பி இறந்துவிட்டதால் ஆஜர் எதிரியினுடைய இந்த வழக்கு காசோலை உட்பட 6 காசோலைகள் கருணாநிதி வசம் வைத்திருந்ததை என்னை வைத்து ஒரு காசோலையை என்னிடம் கொடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது SMT பாலிபேக்ஸ் நிறுவனத்தில் மேலாளர் என்றும், அதை மறைத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இதற்கு முன்பாக நான் சொன்ன சேரங்குளத்தில் அபினயா பிரிண்டிங் என்ற நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

SMT நிறுவனர் கருணாநிதி என்பவர் என்னை பயன்படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், எனக்கு, எதிரி பணம் கொடுப்பதற்கு எவ்வித சட்டகடப்பாடு இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டியது என்றால் இல்லை.

**புகார்தாரர் தரப்பு மறுவிசாரணை**

மன்னார்குடி SMT என்ற நிறுவனத்தின் பெயரில் பல உணவகங்கள், பல இனிப்பகங்கள் உள்ளன. மேற்படி நிறுவனங்களில் ஆர்டர் செய்ய வேண்டும் என்றால் மேற்படி குறுக்கு விசாரணையில் சொன்ன நம்பருக்கு (9842653828) ஆர்டர் செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

9842653828 என்ற செல்போன் எண் SMT நிறுவனர் உரிமையாளர் கருணாநிதி என்பவரின் தனிப்பட்ட செல்போன் எண் என்றாலும், மற்ற கடைகளுக்கு தனித்தனி நம்பர் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,

Mannargudi.